**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**O.S.No..**299 /2023

**வழக்கு சாட்சி PW.1**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.கே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராக்கியண்ணன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : சின்னாகவுண்டர் | கணவர் பெயர் | : |
| கிராமம் | : அரசபிள்ளைபட்டி | வயது | : 65 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 05.08.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

பிரதிவாதிகள் அவர்கள் நிலத்தில் தென்னை மரங்கள் வைத்துள்ளார் என்றால் ? ஆமாம். பிரதிவாதிகளின் தென்னைமரத்திற்கான வயது 35 ல் இருந்து 40ற்குள் இருக்குமா என்றால் ? 30 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். தென்வடல் ஓடைக்கு கிழபுறம் உள்ள தென்னை மரங்களின் வயது ஒரே அளவு தான் இருக்கும். தென்வடல் ஓடைக்கு கிழபுறம் உள்ள தென்னை மரங்களுக்கு பிரதிவாதியின் கிணற்று பாசனம் உள்ளது என்றால் ? எங்களது கிணற்றில் இருந்தும் தண்ணீர் பாயும். பிரதிவாதிகள் கிணற்றில் இருந்தும் தண்ணீர் பாயும். பிரதிவாதிகள் அவர்களுடைய நிலத்திற்கு பைப் லைன் போட்டு தண்ணீர் பாய்ச்சுகிறார்கள் என்றால் ? ஆமாம். தென்வடல் ஓடைக்கு கிழபுறம் உள்ள பூமிக்கும், பிரதிவாதிகள் கிணற்றில் இருந்து தண்ணீர் செல்லக்கூடிய பைப் லைன் உள்ளது என்றாலும், பைப் லைன் வழியாக தான் தண்ணீர் பாய்கிறது என்றாலும், சரிதான். தென்வடல் ஓடைக்கு மேல்புறம் உள்ள இடத்திற்கு எங்களது கிணற்றில் இருந்து தான் தண்ணீர் பாய்ச்சுகிறோம் என்றால் ? சரிதான். ஓடைக்கு கிழபுறமும் உள்ள நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுகிறோம். தென்வடல் ஓடையை தாண்டி கிழபுறம் செல்வதற்கு எங்களுக்கு பைப் லன்

உள்ளதா என்றால் ? பைப் லைன் உள்ளது. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தற்போது தென்வடல் ஓடைக்கு கிழக்கே உள்ள பூமிக்கு பைப் லைன் செல்கிறதா என்பதை பார்ப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் ? ஆட்சேபனை உண்டு. தற்போது பைப் லைன் இல்லை. பைப் லைனை உடைத்துவிட்டார்கள். அதனால் தான் காவல் துறையில் வழக்கு கொடுக்கப்பட்டது. மேற்படி சங்கதிகளை நான் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் ? அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளை படித்து பார்த்து சொல்ல முடியுமா என்றால் ? வழக்குரை சங்கதிகளில் இல்லை. தென் வடல் ஓடைக்கு கிழக்கு பக்கம் உள்ள பூமிகளுக்கு பைப் லைன் வழியாக தண்ணீர் எடுத்து வந்ததறக்கான எந்தவித தடையங்களும் இல்லை என்றால் ? பைப் லைனை உடைத்து இரவு நேரத்தில் மண் கரை போட்டுவிட்டார்கள். நான் சொல்வது பொய் என்று சொன்னாலும் தென்வடல் ஓடைக்கு கிழபுறம் உள்ள பகுதிக்கு பைப் லைன் வழியாக எப்போதும் தண்ணீர் பாய்ச்சவில்லை என்றாலும் வழக்கிறக்காக வேண்டி பொயயாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வழியாக சொத்தினை பார்வையிட்டு அளவீடுகள் மேற்கொள்ள தயாராக உள்ளேனா என்றால் ? தயாரா உள்ளேன். நான் நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடுகள் மேற்கொள்ள மனு தாக்கல் செய்ய தயராக உள்ளேனா என்றால் ? நான் மனு தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கினை நிரூபிக்கும் வகையில் நீதிமன்ற ஆணையர் நியமணம் செய்து வழக்கை நிரூபிக்க தயராக உள்ளேனா என்றால் ? தாவா சொத்தான 59 செண்ட் நிலத்தினை அளக்க தயராக உள்ளேன். தாவா சொத்துக்கள் மற்றும் மொத்த சொத்துக்களையும் அளவீடுகள் மேற்கொண்டால் மட்டுமே உண்மை நிலையை அறிய முடியும் என்றால் ? மற்றவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை என்னால் அளவிட முடியாது. மற்றவர்கள் என்று சொல்லியுள்ளது எனது பங்காளிகள் என்றால் ? ஆமாம். கடந்த 16.09.1948ம் தேதி ஏற்பட்ட பாகப்பிரிவினையில் A மற்றும் B

செடியூல் சொத்துக்களாக பிரிவினை செய்யப்பட்டது என்றால் ? சரிதான். அந்த சொத்துக்களில் ஒரு பகுதி சொத்தை பொறுத்து தான் இந்த வழக்கு என்றால் ? சரிதான். தாவா சொத்து கடந்த 16.09.1948 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் எந்த அட்டவணை சொத்தாக காட்டப்பட்டது என்றால் ? பி அட்டவணை சொத்தாக உள்ளது. கடந்த 1948 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள சொத்துக்களை முழுமையாக அளவீடுகள் செய்தால் மட்டுமே சொத்துக்களின் விஸ்தீரணத்தை சரியாக அறியமுடியும் என்றால் ? அது தவறு. என்னுடைய பாகத்தை மட்டும் அளக்க தயாராக உள்ளேன். தாவா சொத்துக்களுக்கு கடந்த 35 ஆண்டு காலமாக பி யதாஸ்து பட்டா உள்ளது என்றால் ? ஆமாம். அதற்கு முன்பிருந்து கடந்த 77 ஆண்டு காலமாக பிரதிவாதி வசம் தான் அனுபவத்தில் சொத்து இருந்து வருகிறது என்றால் ? சரியல்ல. தென்வடல் ஓடைக்கு கிழக்கே உள்ள தென்மை மரங்களுக்கு பிரதிவாதி தான் தண்ணீர் பாய்ச்சி வருகிறார்கள் என்றால் ? ஏற்கனவே இருந்த பைப்பினை உடைத்து விட்டு தற்போது பிரதிவாதிகள் பைப் லைன் வழியாக தண்ணீர் பாய்ச்சி வருகிறார்கள். நான் சொல்வதை போல் பிரதிவாதிகள் பைப்பை உடைத்து விட்டு தண்ணீர் பாய்ச்சவில்லை என்றாலும், தாவா சொத்து மற்றும் அதில் உள்ள தென்னை மரங்கள் பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றாலும், சரியல்ல. தாவா சொத்திற்கு தென்புறம் உள்ள சர்வே எண்.145/1 என்றால் ? சரியல்ல. தென்வடல் வேறு சர்வே எண் ஆகும். கார்த்தி என்பவர் சொத்து என்றால் ? பிரதிவாதிகளுக்கு அண்ணன், தம்பிகள். எங்களுக்கு பங்காளிகள் ஆகும். தாவா சொத்திற்கு தெற்கே உள்ள கார்த்திகேயன் எவ்வளவு சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்றால் ? எனக்கு அதுபற்றி தெரியாது. கார்த்திகேயன் என்பவர் அதிக விஸ்தீரணம் உள்ள சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்றால் ? சரியல்ல. தாவா சொத்திற்கு நான்கு எல்லைகள் சொல்ல முடியுமா என்றால் ? சொல்ல முடியும். தாவா சொத்திற்கு மேற்கே எனது சொத்து உள்ளது. கிழக்கே ஆறுமுகம் மகன் ராசு என்பவருடைய சொத்து உள்ளது.

வடக்கில் பழனி ஒட்டனசத்திரம் ரோடு உள்ளது. தெற்கில் ஆறுமுகம் மகன் ராசு என்பவரது பூமி உள்ளது. நான் சொல்லியுள்ள நான்குமால்களுக்குள் கட்டுப்பட்டசொத்து ஆறுமுகம் மகன் ராசு என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் ? சரியல்ல. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தான் வழக்குரை சொத்துவிபரத்தில் நான்குமால் குறிப்பிடாமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல. நான் சொல்லியுள்ள நான்குஎல்லைகளை நிரூபணம் செய்ய ஏதாவது ஒரு ஆவணம் வைத்துள்ளேனா என்றால் ? ஆவணம் வைத்துள்ளேன். 1994–ம் ஆண்டு வேறு பத்திரங்கள் பதிவு ஏற்பட்டுள்ளது. அந்த பத்திரங்களை தாக்கல் செய்ய தயராக உள்ளேனா என்றால் ? தயராக உள்ளேன். நான் சொல்வது பொய் என்றாலும், நான்குமால்களை நான் தவறாக சொல்லியுள்ள காரணத்தினால் தான் என்னால் நான்குமால்களை குறிக்க கூடிய ஆவணங்களை நான் நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்குரை சொத்து விபரத்தில் நான்கு எல்லைகளை குறிப்பிடவில்லை என்றாலும் ? சரியல்ல. சர்வே எண்.145/1 என்ற புலத்தில் உள்ள அனைத்து தரப்பினர்களையும் சேர்த்து வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும், அனைத்து உட்பிரிவுகளையும் அளவீடுகள் மேற்கொள்ள வேண்டும் என்றாலும், அப்போது தான் சொத்தின் உண்மைதன்மை அறிய முடியும் என்றால் ? சரியல்ல. சர்வே எண்.145/1என்ற புலத்தில் ஏற்பட்டுள்ள உட்பிரிவுகளில் உள்ள அனைத்து நபர்களையும் இவ்வழக்கில் உரிய தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் சரியான சொத்து விபரத்தை கொடுக்காத காரணத்தினால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல. கடந்த 16.09.1948ம் ஆண்டு தரப்பினர்களுக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினையின் தன்மைபடி உள்ள சொத்துக்களை யாராவது விற்பனை செய்துள்ளார்களா என்றால் ? நான் விற்பனை செய்துள்ளேன். நான் விற்பனை

செய்துள்ள சொத்துக்களில் சர்வே எண்.145/1எ என்ற புலமானது எனக்கு பாகப்பிரிவினையின் வழியாக கிடைத்த சொத்து என்றால் ? சரிதான். எனது குடும்பத்திற்கு கிடைத்த சொத்து ஆகும். அந்த சொத்தின் ஒரு பகுதியை விற்பனை செய்துள்ளேன்.

தொடர்ச்சியான குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.08.05 18:55:34 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்